மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பெண் உறுப்பினர் சொல்லும்போது, அதை நான் மறுக்க முடியாது. மேற்கண்ட பெண் உறுப்பினர் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு அந்தந்தக் கலரில் கொடுக்க நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது மகளிர் தொடர்பான கேள்வி என்பதால், ஆண்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது. (சிரிப்பு)

போக்குவரத்துக் கழகம் அமைத்தல்.

*5157. திரு. கே. பிச்சாண்டி :

திரு. அ. இராசேந்திரன் :

திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், புதிதாகத் துவங்கப்பட்ட மாவட்டம். மாவட்டம் முழுவதும் சுமார் ஆயிரம் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம், வேலூரில் உள்ளதால், சரியாக வண்டிகள் நிர்வகிக்கப்படுவதில்லை. நிர்வாக வசதிக்காகவும் ஒழுங்காக வண்டிகள் இயக்கப்படுவதற்கும், அரசுக்கு லாபம் அளிக்கின்ற வகையில், மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்று போக்குவரத்துக் குழுவின் கருத்து உள்ளதால், தனியாக திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு போக்குவரத்துக் கழகத்தைத் துவங்கி அதற்கு அன்னை அஞ்சுகம் போக்குவரத்துக் கழகம் என்று பெயரிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே போக்குவரத்து துறையினுடைய மேம்பாடு குறித்து, பட்டாபிராமன் குழு பரிந்துரையின்பேரில் ஒரு போக்குவரத்துக் கழகம் சிறந்த முறையில் செயலாற்ற வேண்டுமானால், 350 பேருந்துகளிலிருந்து

1990 ஏப்ரல் 19]

600 பேருந்துகள் வரை ஒரு கழகத்திற்கு இருக்க வேண்டுமென்ற அவர்களுடைய கருத்து சொல்லப்பட்டது. அந்த அடிப்படையிலே நம்முடைய போக்குவரத்துக்கழசங்கள் தமிழ்நாட்டிலே இயங்கி வருகின்றன. இது ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லப் பட்ட கருத்தாகும். தற்போதைய சூழ்நிலையில், மீண்டும் போக்குவரத்துக் கழகங்கள் எப்படி அமைக்கப்பட்டால் நிர் வாகம் நடத்துவதற்கு சிறப்பாக இருக்கும் என்கின்ற அடிப்படை யிலேதான் கருத்துக்களைச் சொல்ல மதிப்பிற்குரிய தில்லை நாயகம் அவர்களுடைய தலைமையில் ஒரு மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டு, அவர்கள் அதுபற்றி கருத்துகளைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். கருத்து அரசுக்குக் கிடைக்கப்பெற்ற பிறகு அதைப் பரிசீலித்து, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், தற்போது ஓடிக்கொண்டிருக்கும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் எத்தனை என்று அறி விக்க இயலுமா என அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கையின் விவரம் என்னிடம் இப்போது இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் தற்சமயம் நான் அறிந்த வரையில் 996 பேருந்துகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. ஏற்கனவே, பெரியார் போக்குவரத்துக் கழக வண்டிகளும், திருவண்ணாமலை சம்பு வராயர் மாவட்டத்தின் ஒரு பகுதியிலே போய்க் கொண்டிருக் கின்றன. ஆக, திருவண்ணாமலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்தபோது கூட, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்கள், நகரமன்றத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லோரும் பல்வேறு இடங்களிலே, அவர் களுக்கு வரவேற்பு தந்தபோது அங்கே தனியாக ஒரு போக்கு வரத்துக் கழகம் தேவை என்று அதனுடைய அவசியத்தை வற்புறுத்தி இருக்கிறோம். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து எதிர்காலத்தில் விரைவாக ஒரு போக்குவரத்துக் கழகத்தை திருவண்ணாமலையில் ஆரம்பித்து, நம்முடைய உறுப் பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் கூறியதைப்போல, அதற்கு அன்னை அஞ்சுகம் போக்குவரத்துக் கழகம் என்று ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேளை குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, திருவண்ணாமலையில் அமைப்பதற்கான சாத்தியக்கூறு கள் இருக்கலாம், கலசப்பாக்கத்திலே அமைக்க முடியாது.